**ஹொரொவபொதான பிரதேச சபை**
**அனுராதபுரம் மாவட்டம்**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2019 மார்ச் 29 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 ஜுன் 06 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 02 ஆம் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹொரொவபொதான பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் நிதி அறிக்கைகளில் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கியல் கொள்கைகள் நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**(ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் படி ரூபா 100,000 பெறுமதியான உப காரியாலய இடமும் கட்டடமும் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்கள் சரியாக கணக்கில் காட்டப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் படி ரூபா 4,064,278 கூட்டுப் பெறுமதியுடைய 05 காணிகளினதும் ஒரு கட்டடத்தினதும் பெறுமதி கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்கள் சரியாக கணக்கில் காட்டப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iii) | பிளிசரு திட்டத்துக்காக கிடைத்திருந்த ரூபா 755,166 பெறுமதி கொண்ட பேல் இயந்திரத்தின் பெறுமதி கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்கள் சரியாக கணக்கில் காட்டப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iv) | பிளிசரு திட்டத்துக்காகக் கிடைத்திருந்த ஹலர் இயந்திரத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்கள் சரியாக கணக்கில் காட்டப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (v) | 2016 ஆம் ஆண்டிலிருந்து புர நெகும திட்டத்தின் கீழ் கட்டப்பட்டிருந்த கட்டடங்கள் மற்றும் வழங்கப்பட்டிருந்த கணினிகளதும் ஏனைய உபகரணங்களினதும் பெறுமதியான ரூபா 44,245,009 கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்கள் சரியாக கணக்கில் காட்டப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (vi) | 2014 ஆம் ஆண்டில் திவிநெகும அபிவிருத்தி காரியாலயத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 160,536 பெறுமதியான கல்வனைஸ் கொடிக் கம்பங்களின் பெறுமதி கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்கள் சரியாக கணக்கில் காட்டப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (vii) | சபைக்குரிய ரூபா 54,790,929 பெறுமதியான மோட்டார் வாகனங்களும், 6 சில் வண்டிகளும் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்கள் சரியாக கணக்கில் காட்டப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (viii) | மீளாய்வாண்டில் ஊதிய வருவாய் மதிப்பு ரூபா 400,647 மேலதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கில் காட்டப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ix) | பிளிசரு திட்டத்திற்காக ரூபா 4,731,400 செலவழித்துக் கட்டப்பட்டிருந்த கட்டடத்தின் பெறுமதி கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்கள் சரியாக கணக்கில் காட்டப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (x) | மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு கட்டணத்துக்கான முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கப்பட வேண்டிய செலவுகள் கணக்கில் காட்டப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**(இ) இணங்காத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 வரை கடைகளின் ஒப்பந்த வைப்பு பெறுமதி கணக்குக்கும் வைப்புப் பதிவேடுக்கும் இடையில் ரூபா 82,500 வித்தியாசம் காணப்பட்டது. | சம்பந்தப்பட்ட மீதிகளிலுள்ள வித்தியாசங்களை ஒப்பிட்டுப் பார்த்து சரி செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**(ஈ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 06 ஆண்டுகளுக்கும் மேலாக முன் கொண்டு வரப்படும் கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகள் 06 இன் கூட்டுப் பெறுமதி ரூபா 8,055,690 அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | 08 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வரும் கொடுக்க வேண்டிய கணக்கு மீதிகள் 05 இன் கூட்டுப் பெறுமதியான ரூபா 825,145 கொடுத்துத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**(உ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பெறுமதி ரூபா 121,258,706 உடைய கணக்கு வகைகள் 19 இற்குரிய சொத்து ஆவணங்கள், விரிவான உப ஆவணங்கள், வயது பகுப்பாய்வுகள் மற்றும் நிரூபிப்பதற்கான கடிதங்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | நிதி அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருக்கும் பெறுமதியை உறுதிப்படுத்தத் தேவையான எழுத்து மூல அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 200,680 பெறுமதியுடைய கட்டுமானப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட விதத்தைக் காட்டும் பகிர்ந்தளித்த பதிவேடும் நன்மையடைந்தவர்களின் பெயர்ப் பட்டியலும் கணக்காய்வுக்கு ஒப்படைக்கப்படவில்லை. | நிறைவேற்றப்பட்ட காரியங்களை உறுதிப்படுத்த எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், நிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக விதி) | | | |
| (i) | விதி 33 | வீதவரி கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யும் நபர்கள் தொடர்பான பட்டியலொன்றும் ஆதனங்களை தடைசெய்யும் பிடியாணையும் ஒவ்வொரு காலாண்டிலும் தயாரிகக்ப்பட்டிருக்கவில்லை. | 33 ஆம் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | விதி 59 | சபை அதிகாரப் பிரதேசத்தில் வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பாக கணப்பீடொன்று நடாத்தப்பட்டிருக்க வில்லை. | 59 ஆம் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (iii) | விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தமான காணி மற்றம் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன் சகல காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டும் பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | 217 மற்றும் 218 ஆம் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம | | | |
| (i) | நி.பி 257 | சான்றுறுதிப்படுத்தாமல் 11 உறுதிச்சீட்டுக்ளுகக்காக ரூபா 1,385,409 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உறுதிச் சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | நி.பி 571 | இரண்டு வருட காலத்தை கடந்த ரூபா வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நி.பி571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுகக்க வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) | <u>பொது நிர்வாக மற்றும் முகாமை சுற்றறிக்கை</u> | | | |
| | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 07 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஈ) | திறைசேரி செயலாளரின் 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணினி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்து பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த உபகரணங்களுக்கான பட்டியல் பேணப்படல் வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,070,993 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,397,859 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,326,400 | 1,511,392 | 1,343,325 | 1,226,839 | 447,950 | 482,626 | 576,146 | 1,058,772 |
| \(ii) | வாடகை | 5,074,600 | 3,851,465 | 3,546,771 | 7,051,995 | 5,127,800 | 4,744,588 | 2,002,713 | 6,747,301 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 713,000 | 484,050 | 484,050 | 1,033,300 | 902,600 | 942,554 | 90,746 | 1,033,300 |
| (iv) | ஏனைய வருமானம் | 28,053,940 | 51,240,865 | 49,658,263 | 5,064,468 | 28,876,500 | 17,037,886 | 13,556,020 | 3,481,866 |
| | மொத்தம் | 35,167,940 | 57,087,772 | 55,032,409 | 14,376,602 | 35,354,850 | 23,207,654 | 16,225,625 | 12,321,239 |

### 2.2.2 வருமானத்தை அறவிடும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முந்தைய ஆண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 12 மில்லியன்களாக இருந்த நிலுவை வருமானம் மீளாய்வாண்டில் ரூபா 14 மில்லியனாக ஆகியிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/46 மற்றும் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிக்குரிய உள்ளூராட்சி சுற்றறிக்கைக்கிணங்க 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை கடைகள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் படி கடைகளை புதிதாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அவற்றுக்குரிய மதிப்பீட்டின் பிரகாரம் வாடகைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | பொது வர்த்தக நிலைய கடைகளின் ஒப்பந்தங்களைப் புதுப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஜூலை மாதத்திலிருந்து திசெம்பர் வரை வழங்கப்பட்டிருந்த மணல் போக்குவரத்துக்கான அனுமதிக் கடிதத்திற்கிணங்க 139,775 சதுர அலகுகளுக்கு ரூபா 20,966,250 வருமானம் கிடைத்திருக்க வேண்டும் எனினும் பற்றுச்சீட்டுகளுக்கேற்ப 132,73 கியுப்களுக்கு ரூபா 19,909,700 வருமானமே கிடைத்திருப்பதால் 7,043 கியுப்களுக்குரிய ரூபா 1,056,550 குறைவாகக் கிடைத்திருக்கிறது. | கிடைக்க வேண்டிய வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 வரை கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப் பணங்கள் ரூபா 1,502,143 ஆகவும், முத்திரைக் கட்டணங்கள் ரூபா 3,198,025 ஆகவும் காணப்பட்டன. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டம் 126 பிரிவின் கீழ் 28 பிரதானமான விடயங்களை நிறைவேற்றுவதற்கான துணை விதிகள் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. | துணை விதிகள் பிரயோகிக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

#### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயற் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**(இ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கழிவுப் பொருள் முகாமைத்துவம் முறையாக செய்யப்படாததோடு சேகரிக்கப்படும் உக்கும் பொருட்களைக் கொண்டு உரம் தயாரித்து விற்பனை செய்து எவ்வித வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை. | கொம்போஸ்ட் உரத்தைத் தயாரித்து விற்பனை செய்து வருமானத்தை ஈட்டுவதற்கும், திண்மக் கழிவுகளை முறையான விதத்தில் அகற்றவும் ஒழுங்குமுறையொன்றை உருவாக்க வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 பிரகாரம் அடைய வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் குறித்து அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இயந்திரங்களை வாடகைக்குக் கொடுக்கும்போது பதிவேடுகளில் குறித்துக் கொள்ளாமல் வழங்கியிருந்ததோடு, சம்பந்தப்பட்ட வேலை முடிந்ததும் மீற்றர், மணித்தியாலக் கணக்கோ கிலோமீற்றர் கணக்கோ தொழிநுட்ப அதிகாரிகளால் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | அங்கீகாரத்துடன் இயந்திரங்களை வழங்குதல், இயந்திரங்களை வெளியே கொண்டு செல்லும் போதும் கொண்டு வரும் போதும் நிலவும் இயந்திர மணித்தியாலங்களைக் கொண்டு கட்டணங்களை | சமர்ப்பிக்கப்படவில்லை. |

அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல், பதிவேட்டை முறையாகப் பேணி வருதல் ஆகியன செயற்படுத்தப்பட வேண்டும்.

## 3.3. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை சபையின் ஊழியர்களிடையே 11 பதவிகளில் 19 வெற்றிடங்களும், 02 பதவிகள் மேலதிகமாகவும் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | சபையில் பிணை பணம் வைப்பு செய்ய வேண்டிய அனைத்து அதிகாரிகளதும் பிணைத் தொகையை வைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணைத் தொகை வைப்பு செய்ய வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களும் பிணை பணத்தை வைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1980’46 மற்றும் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய உள்ளூராட்சி மன்ற சுற்றறிக்கையின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபையினால் 1994 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படாமல் இருந்ததுடன் | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் புதிய நிர்மாணம் தொடர்பாக தற்காலிக | சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| புதிய நிர்மாணங்கள் இனங்காணப்பட்டு அந்த ஆதனங்களுக்காக வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடிபப்டையில் வீதவரி அறவிடுவதறகு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பராமரிக்கப்படும் காணிகள் 14 ஐ சபைக்கு உரித்தாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட அந்தக் காணிகளை உரித்தாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**3.5.2 செயலற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டில் சபைக்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 2,175,000 பெறுமதியான ட்ரக்டர் வண்டியானது 2016 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை எவ்விதப் பயன்பாட்டுக்கும் உட்படுத்தப்படாது சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய ட்ரக்டர் வண்டி தொடர்பான சோதனைகள் நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 07 வாகனங்கள் செயலிழந்த நிலையில் காணப்படுவதோடு இந்த வாகனங்களைப் பழுதுபார்த்து பாவனைக்குட்படுத்த அல்லது அகற்ற எவ்வித | தொடர்புடைய வாகனங்களை சோதனைக்குட்படுத்தி பழுது பார்க்கவோ அல்லது அகற்றவோ நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

நடவடிக்கைகளும்
எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 பெறுகைகள்**

**பெறுகைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பெறுவனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுவனவுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும் | ஏற்றுக்கொள்கிறேன். 2019 ஆம் ஆண்டில் பெறுவனவு திட்டத்தினைத் தயாரித்து பெறுவனவு நடவடிக்கைகளை முறையாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் செயற்படுத்தல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 ஆம் திகதிய DMA/2009(1)(i) இலக்க நிதி மற்றும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை |